பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 24 வியாழக்கிழமை 06.02.2025 கதிர் 090

## இது ரகசியம் அல்ல!

தற்போதைய ஆளும்தரப்பு தேசிய மக்கள் சக்தியுடையது என்று கூறப்பட்டாலும் அதற்குள் ஜேவிபியின் ஆதிக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இது ☞ 2

# பொருளாதாரப் பிரச்சினைக்கே முன்னுரிமை அரசமைப்புத் திருத்தப் பணி அதன் பிறகே

## ஆளும் தரப்புத் திட்டவட்டம்

அரசமைப்புதிருத்தபணிகளைவிடபொருளாதார சவால்களை எதிர்கொள் வதற்கான வேலைத்திட்டங்களுக்கே ஆளும்தரப்பு முன்னுரிமையளித்துள்ளது. அந்தவகையில் தற்போது அரசமைப்பு திருத்தத்தினை மேற்கொள்ளப் போவதில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அமைச்சரவை தீர்மானங்களை அறிவிதபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பில்திருத்தங்களைமேற்கொள்ள



வேண்டியது அத்தியாவசியம். ஆனால் தற்போது அதற்கான பணிகளை ☞ 2

## அருச்சுனா எம்.பி. ஆற்றிய உரையின் பகுதிகள் நீக்கம்

நாடாளுமன்றஉறுப்பினர்இராமநாதன் அர்ச்சுனா முன்வைத்த சிறப்புரிமை மீறல் பத்திரத்தில் உள்ள விடயங்களைத் தவிர்த்து சபையில் உரையாற்றிய ஏனைய அனைத்து விடயங்களும் ஹன்சாட்டிலிருந்து நீக்கப்படும் என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

சட்டம் அனைவருக்கும் சமமானது. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி அமைச்சராக இருந்தாலும் சரி எவரும் சட்டத்துக்கு அப்பாற்பட்டு செயற்பட ☞ 8

## உலக உச்சி மாநாட்டுக்காக பெப். 10 ஜனாதிபதி பயணம்

2025 ஆம் ஆண்டு உலக உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அனுரகுமாரதிசாநாயக்கபெப்ரவரி10முதல் 13 வரை ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்குச் செல்லவுள்ளார் என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கியஅரபுஎமிரேட்ஸ்அதிபர்முகமது பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்தப் பயணத்தை மேற்கொள்கிறார் என்று அமைச்சகம் ஒரு அறிக்கையை வெளியிட்டது.

இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி '2025 உலக அரசாங்க உச்சி மாநாட்டில்' உரையாற்ற உள்ளார்.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையிலான ☞ 8

# அடக்குமுறையைவிட்டு ஜனநாயக வழியில் ஆளும்தரப்புச் செயற்படவேண்டும் – சஜித்

அடக்குமுறைகளைக் கைவிட்டு ஆளும்தரப்பு ஜனநாயக முறையில் செயற்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பிக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஆளும்தரப்புக் கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்து வரும்போது அடக்கு முறைகளை கையாண்டு வருகிறது. கம்பஹாவில் அது இடம்பெற்றுள்ளது. அதேபோன்று கம்புறுப்பிட்டியவில் அமைதியான முறையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் இடம்பெறும்போது அங்கும் அடக்குமுறை இடம்பெற்றுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராக கூட்டம் நடத்த முற்பட்டபோது, நாணய நிதியத்துக்கு எதிரான கூட்டங்களை பல்கலைக்கழகத்தில் நடத்த முடியாது என பல்கலைக்ழக உபவேந்தர் கடிதம் அனுப்பி இருக்கிறார். இது ஜனநாயக விரோத செயற்பாடாகும். நாடாளுமன்றத்தின் சம்பிரதாயங்கள், சிறப்புரிமைகள், நிலையியற் கட்டளைகள் சகலதும் இன்று ☞ 8



## சுஜீவ எம்.பிக்கு ரூ. 2.5 கோடி நட்டஈடு வழங்க உத்தரவு

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுஜீவ சேனசிங்கவுக்கு 250 மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ரத்நாயக்கவுக்கு கல்கிஸ்ஸை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில், தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் வைத்து, சுஜீவ சேனசிங்கவுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் ரத்நாயக்கவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை

நாடாளுமன்ற குழுக்களுக்கு எதிர்க்கட்சிகளுக்கு நியாயமான சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சிக்களுக்கு வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தில் முறையிட நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் எச்சரிக்கை விடுத்தனர்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. பிரதான ☞ 2

## இந்திய மீனவர் பிரச்சினை; தொடர்ந்து நடக்கிறது பேச்சு

### அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

ஆளும்தரப்பு என்ற ரீதியில் இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் செயற்படுவதற்கானவரையறைகள் உள்ளன. எவ்வாறிருப்பினும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்கான பேச்சு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு ☞ 8

## ஜனாதிபதி நிதிய சேவைகளை விரிவுபடுத்த நடவடிக்கைகள்

### பிரதேச சபைகளில் இனிப் பெறலாம்

ஜனாதிபதிநிதியத்தின்சேவைகளை விரிவுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. சகல பிரதேச சபைகள் ஊடாகவும் நிதியத்தின் நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிப்பதற்கும் பிரதேச சபைகள் ஊடாக குறித்த விண்ணப்பதாரிகளுக்கு ☞ 8

## நெல்லுக்கு உத்தரவாத விலை அறிவிப்பு

நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயிக்காது அரசாங்கம் பின்வாங்குவதாக விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகள் விசனம் தெரிவித்து வந்த நிலையில் நெல்லுக்கான புதிய நிர்ணய விலையை ஆளும்தரப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. பெரும்போக அறுவடை முழுமையாகப் பூர்த்தியாகி, நெல்லைக் களஞ்சியப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள் அதனை விற்று முடித்த நிலையில் உத்தரவாத விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் நாட்டு அரிசி நெல் 120 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் சம்பா நெல் 125 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் கீரி சம்பா நெல் 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அமைச்சர் லால்காந்த தெரிவித்தார். நெற்சந்தைப்படுத்தல் அதிகார சபையினால் இன்று முதல் நெல் கொள்வனவு செய்யப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

விவசாய அமைச்சில் நேற்று செய்தியாளர்கள் முன்பாக அமைச்சர் நெல்லுக்கான உத்தரவாத விலைகளை அறிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் விவசாயிகளிடம் கோரிக்கை விடுக்கிறோம். நாட்டு அரிசி சம்பா அரிசி மற்றும் கீரி சம்பா ஆகிய நெல்லினை நாம் அறிவித்த விலையினைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய தேவை கிடையாது. நெற்சந்தைப்படுத்தல் அதிகாரசபையினால் இந்த விலைக்கு கொள்வனவு செய்யப்படும். ஆனால் எவரேனும் நெற்சந்தைப்படுத்தல் அதிகார சபையின் விலையைவிட அதிக விலைக்கு பெற்றுக்கொண்டால் அது பிரச்சினை கிடையாது. நாம் இந்த விலைக்கே ☞ 8

## மக்களின் உயிரியல் தகவல் சேகரிப்பு:

# பகிரங்க விவாதத்திற்கு வரும்படி மக்கள் பேராட்ட முன்னணி சவால்

டிஜிட்டல் மயமாக்கல் என்ற போர்வையில் ஆளும்தரப்பு இலங்கை மக்களின் உயிரியல் தரவுகளை சேகரிக்கப்போகிறது என்பது தொடர்பான பகிரங்க விவாதத்திற்கு வருமாறு டிஜிட்டல் ஜனாதிபதி, அமைச்சர், டிஜிட்டல் பிரதி அமைச்சர் ஆகியோருக்கு மக்கள் போராட்டக் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் பதில் வழங்க வேண்டும் எனவும் இதுபோன்ற விடயங்களை திருட்டுத்தனமாகவும் மறைத்தும் செய்வதற்கு ஒருபோதும் அனுமதி வழங்க முடியாது எனவும் முன்னிலை சோசலிஸக்கட்சியின் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# கடவுச் சீட்டுக்களை இரவு பகலாக இனி வழங்குவதற்கு நடவடிக்கை

குடிவரவு குடியகல்வு திணைக் களத்தை 24 மணித்தியாலங்களும் இயங்கச் செய்து, நாளொன்று 4,000 கடவுச்சீட்டுக்களைவிநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிகப் பணியாளர்களாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை அரச சேவைகள் ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுபடுத் துவதற்கானயோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடவுச்சீட்டுப் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள புத்திஜீவிகள் குழுவின் விதந்துரைக்கமைய 1,100,000 'பி' வகைக் கடவுச்சீட்டுக்களை சமகால விநியோகத்தர்களுக்குவழங்குவதற்கான பெறுகை செயன்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, தற்போதுள்ள கடவுச்சீட்டு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தாமதத்தை நீக்குவதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்து 24 மணித்தியாலயங்கள் மேற்கொள்வதன் மூலம் நாளொன்றுக்கு 4000 கடவுச்சீட்டுக்கள் வீதம் வெளியிடுவதற்கான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்குத் தேவையான மேலதிக பணிக்குழாமினரை குறித்த திணைக்களத்தில்கடமையாற்றிஓய்வுபெற்றஉத்தியோகத்தர்களை அரச சேவைகள் ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்துவதன் மூலமும் மற்றும் தற்போது அரசசேவையில் ஈடுபடுகின்ற ஊழியர்களை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கேட்டறிந்து இணைப்புச் செய்வதன் மூலமும்ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இனி இது .....

உள் முரண்பாடுகளை அதிகரிக்கின்றது. இந்த முரண்பாடுகள் தேர்தலின் போதும் காணப்பட்டன. இதனால் தேசிய மக்கள் சக்தியின் புகழ்பெற்ற வேட்பாளர்கள் சிலர், ஜேவிபியால்நிறுத்தப்பட்டயாரென்றேதெரியாத வேட்பாளர்களால் தோற்கடிக்கப்பட்டனர். தனது ஆதரவுப் பலத்தைக் கொண்டு ஜேவிபி அதனைச் சாதித்தது.

இதன் தொடர்ச்சியாக கிராமப்புறங்களில் திசைகாட்டிஉறுப்பினர்கள்மீதானதுன்புறுத்தல் மற்றும் புறக்கணிப்பு சம்பவங்கள் இந்த பதற்றங்களை மேலும் அம்பலப்படுத்தி வந்துள்ளன. இந்த முரண்பாட்டின் வெளிப்பாடாகத்தான் ரூபாவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் சுனேஷ் பண்டார திசாநாயக்கவின்பதவிவிலகலும்இடம்பெற்றது. வெகுஜன ஊடகங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த விஜித ஹேரத்தால் தேசிய தொலைக்காட்சியின் தலைவராக ஷனேஷ் நியமிக்கப்பட்டார். இது அனுர,- ஹரினி, - விஜித காபந்து அமைச்சரவை இருந்தபோது இது நடந்தது.

ஷனேஷ் தலைவராகப் பணியாற்றிய குறுகிய காலத்தில் தனது திறமைகள் மற்றும் தொழில்முறை அறிவைப் பயன்படுத்தி ஊழல் நிறைந்த நிறுவனத்தை சுத்தம் செய்ய முயன்றார். அத்தகைய நடவடிக்கைகளுக்கு அவர் பெயர் போனவர். பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ வசம் ஊடகத்துறை ஒப்படைக்கப்பட்டது, இந்த மாற்றத்திற்குப் பிறகு, ஷனேஷ் திடீரென ராஜினாமா செய்ததாக அறிவிக்கப்பட்டது. புதிய அமைச்சருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுதான் ராஜினாமாவுக்குக் காரணம் என்று பலர் உணர்ந்து கருத்து தெரிவித்தனர். இருப்பினும், சுரேஷின் ஃபேஸ்புக் பதிவு இந்த ஊகங்களை மறுத்து, அவர் மூன்று மாதங்களுக்கு மட்டுமே தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டார் எனவும், காலம் முடிந்ததும் அவர் பதவி விலகிவிட்டார் என்றும் தெரிவித்தது, தேசியப் பொறுப்புகளுடன் ஒரு புதிய பங்கை ஏற்க இருக்கிறார் எனவும் கூறப்பட்டது.

இருப்பினும், சனேஷ் அத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொண்டாரா என்பது இன்னும் தெரியவில்லை, அவர் ரூபவாஹினியை விட்டு வெளியேறியது அமைச்சருடனான கருத்து வேறுபாடு காரணமாகத்தான் என்பதை இது உறுதிப்படுத்துவதாக இருக்கின்றது.

கடந்தவாரம்சேனேஷ்பதவிவிலகியதைத் இந்த ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட மற்றொரு திணைக்களத் தலைவரும் பதவி விலகியுள்ளார். போக்குவரத்து அமைச்சரால் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்ட ரமல் சிறிவர்த்தனவே அவர். இதற்கு முன்னரும் அவர் நான்கு தடவைகள் இதே பதவியில் இருந்திருக்கிறார். போக்குவரத்துச் சபையை மேம்படுத்துவதில் திறமையானவர் என்று நம்பப்படுபவர். சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் அவர் இந்தப் பதவியை வகித்துள்ளார். அந்தக் காலத்தில் சுதந்திரக் கட்சியின் அரசியலிலும் அவர் பங்கெடுத்துள்ளார். தற்போதைய ஆளும்தரப்பின் கம்பஹா மாவட்டத் தளபதியான விஜித ஹேரத்துடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருப்பதால் கம்பஹா மாவட்டத்தில் இருந்து கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது மாலிமாவ வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்தார்.

அனுர, விஜித மற்றும் ஹரினி அமைச்சரவையை அமைத்தபோது, விஜிதவுடனான அவருக்கிருந்த நெருங்கிய உறவின் காரணமாக ராமலுக்கு மீண்டும் போக்குவரத்துச் சபைத் தலைவர் பதவி வழங்கப்பட்டது. அமைச்சர் மாற்றப்பட்டவுடன் ராமலும் ராஜினாமா செய்தார், ஷனேஷ் மற்றும் ராமல் இருவரும் அமைச்சர் விஜித ஹேரத்தால் நியமிக்கப்பட்டவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுதான் இதற்குக் காரணம் என்று பலர் கருதுகின்றனர். இதற்கு மேலதிகமாக, ஷனேஷ் தனது அமைச்சருடன் எதிர்கொள்ள வேண்டியிருந்த சிக்கலைவிடப் பெரிய சிக்கலை ராமல் எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்ற கருத்து எழுந்தது.

ராமலின் பதவி விலகல் ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்றது. மேலும் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவும் ராமலுடன் நேரடியாகப் பேசி, அவரை சமாதானப்படுத்தினார் எனவும், சுமுகமான பேச்சு மூலம் விஷயங்களை சரிசெய்ய முடியும் என்றும் கூறப்படுகிறது. அமைச்சர் விஜித ஹேரத்தும் ராமலுடன் பேசினார் என்று கூறப்படுகிறது, இந்த விஷயத்தைத் தானே பொறுப்பெடுத்துத் தீர்ப்பார் என்று உறுதியளித்தார் எனவும் கூறப்படுகிறது. ஜனாதிபதியும் அமைச்சரும் ராமலுடன் பேசியது ராமல் தனது பதவி விலகல் குறித்து ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிடுவதைத் தடுப்பதற்காகவே என்று கூறுவோரும் உள்ளனர்.

இருப்பினும், மிக முக்கியமாக, பிமல் ரத்நாயக்கஅடுத்தஜேவிபிதலைவராகபலரால் நம்பப்படுகிறார், எனவேஎந்தசூழ்நிலையிலும் அவருக்கு எதிராக ஆளும்தரப்புக்குள் எந்த முடிவும் எடுக்கப்படாது.

இந்தப் பதவி விலகல் சூடு தணிவதற்கு முன்பு, அநுர, ஹரினி, விஜித அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட மற்றொருவரான வீட்டுவசதி மேம்பாட்டு ஆணையத்தின்தலைவரமொன்டிரணதுங்க தனது பதவியிலிருந்து விலகினார். மோன்டி ரணதுங்க வெள்ளிக்கிழமை தனது பதவி விலகலுடன் ஒருநீண்டகடிதத்தை அமைச்சர் அநுர கருணாதிலகாவுக்கு அனுப்பினார். அவரது பதவி விலகலும் ஆளும்தரப்புக்குள் நிகழ்ந்தமுந்தையஇரண்டுபதவிவிலகலுடன் தொடர்புபடுத்தக்கூடியது.

திசைகாட்டி மீதான இந்தத் தாக்குதல்கள் ஆளும்தரப்பிற்குள் ஜே.வி.பியால் வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதல்கள் என்பதற்கான அறிகுறிகள் இருப்பதாக சிங்கள ஊடகங்கள் கூறுகின்றன.

ஒரு சில சம்பவங்கள் மட்டுமே வெளிவந்திருந்தாலும், ஆளும்தரப்புக்குள் இன்னும் பல மோதல்கள் கொதித்துக்கொண்டிருக்கின்றன என்றும் அவை இன்னும்வெளிச்சத்திற்கு வரவில்லை என்றும் கூறப்படுகின்றது.

திசைகாட்டி உறுப்பினர்கள் ஜேவிபியின் ஒரு பகுதியாக இல்லாவிட்டாலும், அவர்கள் இதற்குள் சிக்கித் தவித்து, அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டு, திசையின்றி விடப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது. அவர்களுக்கு ஆதரவையோ அல்லது நிவாரணத்தையோ பெற்றுத்தர யாரும் இல்லை. ஆளும்தரப்பில் ஒரு சக்திவாய்ந்த பதவியை வகித்தாலும், அவர்களின் தலைவர் ஹரிணியும் ஆதரவற்றவராகவே தோன்றுகிறார். ஆளும்தரப்பைப் பகிரங்கமாக பாதுகாக்கும் மற்ற அமைச்சர்களைப் போலல்லாமல், ஹரினிநாடாளுமன்றத்திற்குள் மட்டுமே ஆளும்தரப்பிற்கு ஆதரவாகப் பேசுகிறார், வெளியே அமைதியாக இருக்கிறார். இந்த அரசியல்செயலற்றதன்மை திசைகாட்டியினரை அளும்தரப்புக்குள் எந்த ஆதரவும் இல்லாத நிச்சயமற்ற தன்மைக்குள் தள்ளியுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொருளாதாரப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிப்பதற்குநாம்எதிர்பார்க்கவில்லை. இந்த ஆட்சி உருவாகி குறுகிய காலமே கடந்துள்ளது. நாட்டில் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

தற்போது நாம் எதிர்கொண்டுள்ள பெரும் சவால்பொருளாதாரப்பிரச்சினையே. ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையிலான முழு ஆளும்தரப்பும் அந்தச் சவாலை எதிர்கொள்வதற்கான பணிகளிலேயே ஈடுபட்டுள்ளது. அதற்கும் இன்னும் காலம் செல்லும். இதன்போது ஏற்படக்கூடிய வழமையான பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றையும் முகாமைத்துவம் செய்து வருகின்றோம்.

பொருளாதாரம் ஓரளவு உறுதியானதைத் தொடர்ந்து அரசமைப்புத் திருத்தப் பணிகளை முன்னெடுப்போம். அந்தப் பணிகளையும் நீண்ட நாட்களுக்கு இழுத்துச் செல்ல மாட்டோம். குறிப்பிட்ட காலத்துக்குள் மக்களின் கருத்துக்களுக்குமுன்னுரிமையளிப்பதற்கான பொறிமுறையொன்றை உருவாக்கி உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அதற்கமைய நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் பொருத்தமான அரசமைப்பொன்றை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

அனைத்தையும் ஒன்றுடனொன்று பிணைத்துக்கொண்டுஅவற்றைவீணடிப்பதற்கு நாம்தயாராக இல்லை. எனினும்பொருளாதார பிரச்சினைகளுக்குதீர்வினைவழங்குவதற்கே நாம் முன்னுரிமையளித்துள்ளோம் என்றார்.

## ஆளும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

எதிர்த் தரப்பில் 12 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இதில் பல்வேறு மாகாணங்கள், கலாசாரத்தைச்சேர்ந்தவர்கள் இருக்கின்றனர். ஆனால் நாடாளுமன்ற வரலாற்றில் ஒருபோதும்இல்லாதவகையில்நாடாளுமன்ற செயற்குழுக்களில்எதிர்க்கட்சிஉறுப்பினர்களின் பங்குபற்றலைஆளும்தரப்புவேண்டுமென்றே குறைத்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி, சபாநாயகர் மற்றும் சபை முதல்வரை சந்தித்து கலந்துரையாடி இருந்தோம். ஆனால் இதுவரை இதுதொடர்பில் எந்த அறிவிப்பும் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

நாடாளுமன்ற குழுக்களுக்கு உறுப்பினர்களை அதிகரிப்பதன் மூலம் எந்தவித மேலதிக செலவும் ஏற்படுவதில்லை. இதற்கு முன்னரும் செயற்குழுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அதிகமான செயற்குழுக்களின் எண்ணிக்கையில் அதிக சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் சிறிய வித்தியாசமே இருந்து வந்துள்ளது. குறிப்பாக 8ஆவது நாடாளுமன்றத்தில் கோப் குகுவின்தலைவராகஎதிர்க்கட்சிஉறுப்பினராக சுனில் ஹந்துன்னெத்தி இருந்து வந்தார். மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் 6 பேர் இருக்கையில் 4 பேர் கோப் குழுவில் அங்கம் வகித்தார்கள்.

அதனால் எதிர்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை செயற்குழுக்களில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கமாறு கேட்டுக்கொள்கிறோம். அதன் பின்னர் நாடாளுமன்றசெயற்குழுக்களுக்குஎதிர்க்கட்சி உறுப்பினர்களைபெயரிடுவதற்குநடவடிக்கை எடுப்போம் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் அஜித் பி பெரேரா, நாடாளுமன்ற செயற்குழுக்களுக்குஎதிர்கட்சிஉறுப்பினர்களின் பங்குபற்றல் இல்லாமலே இந்த குழுக்களை கொண்டு செல்ல ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது - என்றார்.

அதனால் எதிர்கட்சியில் இருக்கும் கட்சி தலைவர்கள் இது தொடர்பில் சிறப்புரிமை பிரச்சினை எழுப்ப இருக்கிறார்கள். அதனால் நாங்கள் முன்வைத்திருக்கும் சிறப்புரிமை பிரச்சினையை இன்றைய தினமே எடுத்துக்கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த தயாசிறி ஜயசேகர, நாடாளுமன்ற குழுக்களில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை இருக்கும் வகையில் எதிர்க்கட்சிக்கு போதுமான சந்தப்பத்தை வழங்கவேண்டும் என்றே இங்கிலாந்து நாடாளுமன்ற சம்பிரதாய ஏஸ்கின் மே புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆளும்தரப்பு கோப் குழுவுக்கு தலைவரை நியமித்திருப்பதுபோன்று கோபா குழுவுக்கும் தலைவர் ஒருவரை நியமித்திருப்பதாக தெரியவருகிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பங்குபற்றல் இல்லாமல் எவ்வாறு குழுக்களின் தலைவரைத் தெரிவு செய்ய முடியும். எதிர்கட்சி உறுப்பினர்களின் பங்குபற்றல் இல்லாமல் நாடாளுமன்ற குழுக்களை முன்னெடுத்துச்செல்ல முடியாது.

அதனால் குழுக்களில் ஆளும் தரப்புக்கும் உறுப்பினர்களை அதிகரித்து, எதிர்கட்சிக்கும் அந்த சந்தர்ப்பத்தை வழங்குமாறே கேட்டுக்கொள்கிறோம். இல்லாவிட்டால் நாடாளுமன்றத்தைக் கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்படும். அத்துடன் நாங்கள் இந்தப் பிரச்சினையை இத்துடன் முடிவுக்கு கொணடுவரப்போவதில்லை. அனைத்து நாடாளுமன்றங்களின் ஒன்றியத்திலும் முறையிடுவோம் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த அமைச்சர் அருன கருணாதிலக்க குறிப்பிடுகையில், இந்த விடயங்கள்தொடர்பில்நாங்கள்பலதடவைகள் கதைத்திருக்கிறோம். எதிர்கட்சிகளின் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்ற குழுக்களின் கூட்டு எண்ணிக்கையை அதிகரித்தும் இருக்கிறோம். நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் நிலையியற் கட்டளைகளுக்கு முரணாக எதனையும் செய்ய வில்லை என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க குறிப்பிடுகையில், நாடாளுமன்ற குழுக்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை நாங்கள் எதிர்க்கட்சி தெரிவிப்பதற்குமுன்னரேஅதிகரித்திருக்கிறோம். நாடாளுமன்றநடவடிக்கைகள் குழு உள்ளிட்ட அனைத்து குழுக்களுக்கும் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறோம்.

அதிகரித்ததை ஐக்கிய மக்கள் சக்தி எடுத்துக்கொண்டது. அதனால் அனைத்து நாடாளுமன்ற ஒன்றியங்களில் நீங்கள் முறையிட்டால் அதனைவிட அதிக விடயங்கள் குறித்துநாங்களும்முறையிடுவோம். 2015இல் எதிர்கட்சியில் குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களே இருந்தார்கள். அதனாலே அன்று எதிர்க்கட்சிக்கு நாடாளுமன்ற குழுக்களுக்குஅதிகஉறுப்பினர்கள்நியமிக்கப்பட்டனர்.

அதனால் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கு மாறாக நாடாளுமன்ற குழுக்களுக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நாங்கள் தயார் இல்லை என்றார்.

அதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வமத மனிதநேய பேரவையின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்தில் சுதந்திரதின நிகழ்வு

வவுனியாவில் மத ஒற்றுமையை வெளிப்படுத்தி 77 ஆவது சுதந்திர தினத்தை அனுஷ்டிப்போம் எனும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்ட சர்வ மத மனிதநேய பேரவையின் ஏற்பாட்டில் சுதந்திர தின நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா நகர சபை மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் சர்வ மத தலைவர்கள் கலந்து கொண்டிருந்ததோடு பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மூவினங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு பரிசில் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன. 100





## வவுனியாவில் கலாசார பாரம்பரியத்துடன் எளிமையாக நடந்த சுதந்திர தின நிகழ்வு

வவுனியா மாவட்ட செயலகத்தில் எளிமையான முறையில் மூவின கலாசார பாரம்பரியத்துடன் இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்தது.

மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் குறித்த நிகழ்வானது செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றதுடன், தேசியக் கொடியினை அரசாங்க அதிபர் ஏற்றி வைத்திருந்தார். இதன் போது மாவட்ட செயலக உத்தியாகேத்தர்களால் தமிழ், சிங்கள மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் நீத்தவர்களிற்காக இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் கலாசாரங்களை பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மதத்தலைவர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், உத்தியாகேத்தர்கள் கலாசார ஆடைகளுடன் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். 100








## கலாபூஷணம் ஏ. பீர் முகம்மது எழுதிய 'தைலாப்பொட்டி' நூல் வெளியீட்டு விழா

(ஸாகிர்)

கலாபூஷணம் ஏ. பீர் முகம்மது எழுதிய 'தைலாப்பொட்டி' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அரங்காக இடம்பெறவுள்ளது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழாவுக்கு கௌரவ அதிதிகளாக சமுத்தி தவிசாளர் கலாநிதி தமீர மஞ்சு, இலங்கை நீதிக்கான மையத்தின் தலைவர் சட்ட முதுமாணி எச்.ஐ.எம். ஸஹ்பி, அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் ஓய்வுநிலை அதிபர் திருமதி அ. பேரின்பராஜா, சபுத்தி பொதுச்செயலாளர் திருமதி இரோசானி கல்ஹேன ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.




தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மொழித்துறைத் தலைவர் கலாநிதி அமரசிரி விக்கிரமரத்ன, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் எம். அப்துல் ரசாக், அக்கரைப்பற்று பேஜஸ் புத்தக இல்லத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிராஜ் மசூர் மற்றும் சிரேஷ்ட எழுத்தாளர் செங்கதிரோன் ஆகியோர் நிகழ்வில் சிறப்புரையாற்றவுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் தெரிவு செய்யப்பட்ட சிறுகதை நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி இிராஜகிராம முன்பள்ளி மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வு

(சுபேசன்)

வடமராட்சி-இராஜகிராம முன்பள்ளிச் சிறார்களை பாடசாலைக்கு வழியனுப்பி வைக்கும் நிகழ்வு அண்மையில் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றிருந்தது.

மேற்படி நிகழ்வில் விருந்தினர்களாக குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதி பா.தர்சிகா, கிராமத்தின் முதியோர் சங்கத் தலைவர் மற்றும் முன்பள்ளி முகாமைத்துவக்குழுத் தலைவர் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது சிறார்களுக்கு கரவை விளையாட்டுச்சுடர் அமைப்பின் ஊடாக கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# விக்கிரமாதித்தனின் வேதாளம்

புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளைவிட பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்வதற்கே தாம் முன்னுரிமை வழங்குவோம் என்பதை ஆளும்தரப்பு மீண்டும் ஒரு தடவை திட்டவட்டமாக உறுதிப்படுத்தியுள்ளது. அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்போது இதனைத் தெரிவித்துள்ளார்.

"அரசமைப்பில்திருத்தங்களைமேற்கொள்ளவேண்டியது அத்தியாவசியம். ஆனால் தற்போது அதற்கான பணிகளை ஆரம்பிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. இந்த ஆட்சி உருவாகி குறுகிய காலமே கடந்துள்ளது. நாட்டில் ஏனைய விடயங்கள்தொடர்பில்ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

தற்போது நாம் எதிர்கொண்டுள்ள பெரும் சவால் பொருளாதாரப் பிரச்சினையே. ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையிலான முழு ஆளும்தரப்பும் அந்தச் சவாலை எதிர்கொள்வதற்கான பணிகளிலேயே ஈடுபட்டுள்ளது. அதற்கும் இன்னும் காலம் செல்லும். இதன்போது ஏற்படக்கூடிய வழமையான பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றையும் முகாமைத்துவம் செய்து வருகின்றோம்.

பொருளாதாரம் ஓரளவு உறுதியானதைத் தொடர்ந்து அரசமைப்புத் திருத்தப் பணிகளை முன்னெடுப்போம். அந்தப் பணிகளையும் நீண்ட நாட்களுக்கு இழுத்துச் செல்ல மாட்டோம். குறிப்பிட்ட காலத்துக்குள் மக்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கான பொறிமுறையொன்றை உருவாக்கி உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அதற்கமைய நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும்பொருத்தமான அரசமைப்பொன்றை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

அனைத்தையும் ஒன்றுடனொன்று பிணைத்துக் கொண்டு அவற்றை வீணடிப்பதற்கு நாம் தயாராக இல்லை. எனினும் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குவதற்கே நாம் முன்னுரிமையளித்துள்ளோம்" என்கிறார் அமைச்சர்.

தேசிய மக்கள் சக்தியின் கடந்த சில மாத ஆட்சியில் அது பொருளாதாரப் பிரச்சினைகளைக் கையாளும் விதம் நம்பிக்கையளிப்பதாக இல்லை. பன்னாட்டு நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மறுசீரமைப்பு முதற்கொண்டு பொருளாதாரச் சிக்கல்களுக்கான அதனது தீர்வுகளை நடைமுறைப்படுத்த முடியாத இக்கட்டுக்குள் அது சிக்கிக்கொண்டுள்ளது தெளிவாகின்றது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் திசைகாட்டி ஆளும்தரப்பால் பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியவில்லை, எரிபொருள்விலையையும்குறைக்கமுடியவில்லை.தேர்தலில் தான் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக தான் செய்ய முடியாமல் போன பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு காரணங்களைத்தான் அது பதிலாக வைத்துள்ளது.

இப்படிப்பொருளாதாரத்தைநிமிர்த்திநிலைநிறுத்துவதற்குத் திணறும்ஆட்சியாளர்கள், தாம்அந்தமுயற்சியில்வெற்றிபெற்ற பின்னர்தான் அரசமைப்பு மாற்றம் குறித்துக் கவனம் செலுத்துவோம் என்பது விக்கிரமாதித்தனின் வேதாளக் கதை மாதிரித்தான் போய் முடியுமோ என்கிற அச்சத்தை ஏற்படுத்துகின்றது. பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்து அதனை மீட்டெடுக்கும் தனது சக்தியை இதுவரையில் வெளிப்படுத்தாத ஒரு ஆட்சியாளர்கள் அந்த வெற்றின் பின்னர்தான் அரசமைப்பு மாற்றம் என்பது குளம் வற்றட்டும் என்று கொக்குக் காத்திருப்பதைப் போன்றதாகவேப டுகின்றது.

# சுதந்திர தினத்திற்கு ஆதரவாக வவுனியாவில் வாகனப் பேரணி!

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு நல்லிணக்கத்தினை வலியுறுத்தி வவுனியாவில் மூவின மக்களினை இணைத்து வாகன பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த பேரணியானது வன்னி மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா, புதிய பஸ் நிலையம் முன்பாக மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பேரணியானது, கண்டி வீதி ஊடாக சென்று பஜார் வீதியினை அடைந்து அங்கிருந்து மணிக்கூண்டு கோபுரம் வரை சென்று அங்கிருந்து கண்டி வீதி ஊடாக சென்று வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்பாக முடிவடைந்திருந்தது.

குறித்த பேரணியில் கலந்து கொண்ட வாகனங்கள் அனைத்திலும் தேசியக்கொடி கட்டப்பட்டு, மூவின மக்களின் கலாசாரங்களை பிரதிபலிக்கும் நடனங்கள் இடம்பெற்றதுடன், நாடோடிகளும், விசேட தேவைக்குட்பட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர். 100













# சுதந்திர தின நிகழ்வில் சம்மாந்துறையில் காணி உறுதிப் பத்திரம் வழங்கிவைப்பு

இலங்கைசனநாயகசோஷலிசகுடியரசின் 77 ஆவது சுதந்திர தின விழா சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை சுற்றாடல் கழக மாணவர்களால் மர நடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

மேலும் எமது நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படைவீரர்கள் மற்றும் ஏனையவர்காளுக்காக 2 நிமிட மௌன பிராத்தனையும் இடம்பெற்றது.

இன்றைய சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு காணி உறுதிப் பாத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் இந் நிகழ்வுக்கு உதவி கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமில், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹுஸைன்,மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா உட்பட மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.










# குருநகரில் எம்.பி. தலைமையில் கழிவு நீர் வாய்க்கால் துப்புரவு

குருநகர் முதலாவது குறுக்குத்தெருவில் நீண்ட காலமாக துபுரவாக்கப்படாமல் காணப்பட்ட பகுதிகளில் கழிவு நீர் தேங்கி நிற்பதால், மக்கள் பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளனர். இதனால் தொற்று நோய்கள், சுவாச பிரச்சனைகள் உள்ளிட்ட பல சிக்கல்கள் ஏற்பட்டு வந்தன.

இந்த விடயத்தை தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி கவனத்தில் கொண்டு, யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரிடம் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து, கடந்ததிங்கட்கிழமை மாநகர ஆணையாளர் நடவடிக்கை எடுத்ததால் துப்புரவாக்கல் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மக்களின் நலனுக்காக உரிய நடவடிக்கைகளை எடுப்பது தன்னுடைய கடமை என்று தே.ம.ச. நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார். மேலும், பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த துப்புரவாக்கல் பணிகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டும் என்ற மக்கள் எதிர்பார்ப்பை பொறுத்து, பொதுமக்கள் இதனைப் பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தினார்.





# கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் திருமலை கடற்கரையில் முன்னெடுப்பு

(அபு அலா)

தூய்மை இலங்கை (கிளீன் சிறிலங்கா) திட்டத்தின் கீழ் திருகோணமலை - நிலாவெளி பிரதேசம் மற்றும் கடற்கரைகளை சுத்தம்செய்யும்நிகழ்வுதிங்கட்கிழமை இடம்பெற்றது.

நிலாவெளி உல்லாசப் பிரயாணிப்படகுமற்றும்சேவைகூட்டுறவுச் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்த தூய்மை இலங்கை (கிளீக் சிறிலங்கா) திட்டத்தில் நிலாவெளி சுற்றுலா அபிவிருத்தி சங்கத்தில் செயலாளர் எஸ்.எம்.முபீன் மற்றும் சுற்றுலாப்படகு சங்கத்தின் தலைவர் அழகையா கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.







# சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கில் மோப்ப நாயுடன் விசேட சோதனைகள்





இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கில் விசேட சோதனை நடவடிக்கையினை விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் இணைந்து செவ்வாய்க்கிழமை மேற்கொண்டனர்.

தெற்கில் இருந்து வடக்கிற்கு செல்லும் ஏ9 பிரதான வீதியில் தாண்டிக்குளம் பகுதியில் மூன்று இடங்களில் மோப்ப நாய்களின் உதவியுடன் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வரும் வாகனங்கள் இரு இடங்களில் வழிமறிக்கப்பட்டு வாகன ஆவணங்கள் சோதிக்கப்பட்டதுடன், மோப்ப நாய்களின் உதவியுடன் வாகனங்களின் உற்பகுதியும் சோதனை செய்யப்பட்டது. தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வரும் வாகனங்கள் ஓர் இடத்தில் வழிமறிக்கப்பட்டு சோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மோட்டர் சைக்கிள்கள், பஸ்கள், பாரவூர்திகள் மற்றும் சொகுசு வாகனங்கள் என பலதும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் விசேட அதிரடிப்படையினர், ஆண் - பெண் பொலிஸார் மற்றும் போக்குவரத்து பொலிஸார் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. 100

# கணக்காளர் ஹபீபுல்லாஹ்வுக்கு கல்முனை மாநகரில் பிரியாவிடை



(அஸ்லம் மௌலானா)

சமுர்த்தி திணைக்களத்தின் பிரதம கணக்காளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ்வுக்கு அலுவலக உத்தியோகத்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வு திங்கட்கிழமை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளரும் அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான ஏ.எஸ்.எம். அஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, ஆயுர்வேத வைத்திய அதிகாரி நந்தினி பவான், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் டிலிப் நௌசாத், வருமான பரிசோதகர் ஏ.ஜே. சமீம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை நிகழ்த்தினர்.

இதன்போது கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ்வின் ஆற்றல், ஆளுமை, சேவைத் திறன்கள், குறுகிய காலத்தினுள் கல்முனை மாநகர சபையின் நன்மதிப்பைக் கட்டியெழுப்புவதற்காகவும்



நிதிப் பிரிவை வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைப்பதற்காகவும் அவர் ஆற்றிய பாரிய பங்களிப்புகள் தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டு, புகழாரம் சூட்டப்பட்டதுடன் அனைத்து உத்தியோகத்தர்கள் சார்பிலும் நினைவுப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.






# கொள்ளைச் சந்தேகநபர்கள் சம்மாந்துறையில் கைது

## கொள்ளையடித்த பொருள்களும் மீட்பு

(றில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மலையடிக்கிராமம் 01 பகுதியில் வீட்டினை உடைத்து தொலைபேசி மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டதாக வீட்டு உரிமையாளர் 03 ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே. சதீஸ்கர் தலைமையிலான குழுவினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது, வீரமுனை 04 பகுதியைச் சேர்ந்த ஒருவரும், மலையடிக் கிராமம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய சந்தேக நபருமே கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து கையடக்க தொலைபேசிகளை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையின் போது, கடந்த 26 ஆம் திகதி இரவு வேளையில் மையவாடி பகுதியில் வயதான பெண்மணியின் வீட்டில் நகை மற்றும் கையடக்க தொலைபேசிகள் கொள்ளையடித்ததும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் இருவர் சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தகவல் அறிந்து வயதான பெண் வெ;வாய்க்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த 26 ஆம் திகதி வீட்டில் இரவு வேளையில் நகை மற்றும் கையடக்க தொலைபேசிகள் கொள்ளையடித்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாடுக்கு அமைய வயதான பெண்மணியிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் 'பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால் உங்கள் இருவரையும் கொலை செய்வேன்' என்று அச்சுறுத்தியதாக வயதான பெண் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் பாண்டிருப்பு 02 பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அத்துடன் கொள்ளையடித்த நகைகளையும் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கையானது, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே. சதீஸ்கர் தலைமையிலான சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத், பொலிஸ் உத்தியோகத்தர் எ.ம். நிரஞ்சன் உள்ளிட்ட அதிகாரிகள் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மதீனா வித்தியாலய மாணவர்களுக்கு காலநிலை மாற்ற விழிப்புணர்வு நிகழ்வு

(ஷினாஸ்)

இலங்கையிலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் கனடாவிலும் அதிகாரபூர்வமாக பதிவு செய்யப்பட்ட காலநிலை மாற்றத்திற்கான நிறுவனம் ஏற்பாடு செய்த பாடசாலை மாணவர்களுக்கான காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டம் நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக மாணவர்களுக்கு ஏற்பாடு செய்த விழிப்புணர்வு செயலமர்வு திங்கட்கிழமை மருதமுனை அல்- மதீனா வித்தியாலயத்தில் பாடசாலையின் பொறுப்பதிபர் எம். என் முகம்மட் முபீன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் போது காலநிலை மாற்றத்திற்கான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.பி. ஸியாரத்துல் பெரோஸ், தற்போது உலக நாட்டிலும் இலங்கையிலும் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றம் தொடர்பில் விளக்கமளித்தார்.

கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர் மப்ரூக், கடல் வளம், கரையோர பாதுகாப்பு வேலை திட்டம் மற்றும் அதன் அவசியம் குறித்து விளக்கமளித்தார். தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலை திட்டத்தின் முக்கிய பகுதிகள் குறித்து கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.எம். ஷினாஸ் அறிமுக குறிப்புரையை வழங்கினார்.

அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் றாசிக் நபாயிஸ், கரையோர பிரதேசங்களை மையப்படுத்தி ஏற்படும் அர்த்தங்கள் மற்றும் அனர்த்தத்தின் போது மாணவர்கள் செயல்பட வேண்டிய விதம் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

காலநிலை மாற்றத்திற்கான நிறுவனத்தின் நிதி முகாமைத்துவத்துவ பொறுப்பதிகாரி எம். என். முஹம்மட் அக்றம் இந்த செயலமர்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்த பாடசாலை மற்றும் வலயக் கல்வி அலுவலகம் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் ஏனையோருக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் காலநிலை மாற்றத்திற்கான நிறுவனத்தின் உயர்பீட உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், வளவாளர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில், தெளிவுபடுத்தப்பட்ட விடயங்களில் இருந்து மாணவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு சரியான விடையை கூறிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.







காலைக்கதிர் Kalaikkathir

## ஆளும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள், எங்களது சிறப்புரிமை பிரச்சினையை முன்வைப்பதற்கு இடமளியுங்கள். அதன் பின்னர் அது சிறப்புரிமைகுழுவுக்குஅனுப்புவதாஇல்லையா என தீர்மானிங்கள் என கேட்டுக்கொண்டனர்.

இறுதியாக சபாநாயகர் இதற்கு பதிலளிக்கையில்,நிலையியற்கட்டளைகளுக்கு அமையவே என்னால் செயற்பட முடியும். அதனால் இந்த பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் குழு மற்றும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளை குழு ஆகியவற்றில் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ளுங்கள். அல்லது எனது தீர்மானத்தை அடுத்தநாடாளுமன்றஅமர்வில் தெரிவிக்கிறேன் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிக்கையில், நாடாளுமன்றகுழுக்களுக்குஉறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, சபாநாயகர், சபை முதல்கருடன் கலந்துரையாடினோம். என்றாலும் தீர்வு கிடைக்காததால் சிறப்புரிமை பிரச்சினை கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வு கிடைத்திருந்தால் இந்தப் பிரச்சினை இங்கு எழுந்திருக்காது. அதனால் இது தொடர்பில் நியாயமான தீரவொன்றை வழங்க வோண்டும் என்றார்.

## ஜனாதிபதி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரண நிதியத்தை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பிரதமர் கலாநிதி ஹரிணி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது பிரதமருடனான கேள்வி நேரத்தின்போது ஆளும் தரப்பின் உறுப்பினர் டி.கே. ஜயசுந்தர முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

ஏழ்மை ஒழிப்பு, கல்வி மற்றும் மத மேம்பாடு மற்றும் நாட்டுக்கு சேவையாற்றிய தரப்பினருக்கு நிவாரணமளித்தல் மற்றும் நலன்புரி சேவைகளுக்காக ஜனாதிபதி நிதியம் உருவாக்கப்பட்டது.

1978ஆம்ஆண்டு07ஆம்இலக்கசட்டத்தின் பிரகாரம்நிதியத்தின்தலைவராகஜனாதிபதியும் நிர்வாக சபையின் உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர்.

ஜனாதிபதி நிதியத்தின் சேவையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கமைய சகல பிரதேச சபைகள் ஊடாக நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு நிகழ்நிலை முறைமை ஊடாக விண்ணப்பம் செய்வதற்கும், பிரதேச சபைகள் ஊடாக நிவாரண நிதியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு புதிய கணினி கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அரச உத்தியோகத்தர்களுக்குபயிற்சிவழுங்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நலனை கருத்திற்கொண்டே ஜனாதிபதிநிதியம்உருவாக்கப்பட்டது. ஆனால், கடந்தகால அரசாங்கங்களில் ஜனாதிபதிகளின் நண்பர்கள் மற்றும் அவர்களுக்கு சார்பான அரசியல்வாதிகளுக்கு மாத்திரமே நிதி வழங்கப்பட்டது. நிதியம் முறைகேடாக பயன்படுத்தப்பட்டது. இதனை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து முறையற்ற வகையில் நிதி பெற்றுக்கொண்டவர்கள் நாட்டுக்கு சேவையாற்றியவர்கள் என்ற அடிப்படையில் நிதி பெற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, இவ்விடயம் குறித்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

## அடக்கு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறப்பட்டு வருகின்றன.

சிறப்புரிமை பிரச்சினையொன்றிற்காக, சபாநாயகருடனும், சபை முதல்வருடனும் மற்றும் ஜனாதிபதியுடனும் சந்தித்தும் தொலைபேசி வாயிலாகவும் கலந்துரையாடினோம்.

குறித்த பிரச்சினைக்கு இதுவரை தீர்வு கிடைக்காத காரணத்தினால்தான் சபையில் இதனை எழுப்புகிறோம். நிலையியற் கட்டளைகள், சம்பிரதாயங்கள், ஒழுங்குவிதிகள் குறித்து சபாநாயகர் பேசினாலும், இந்த சம்பிரதாய ஒழுங்குகள் இன்று பின்பற்றப்படுவதில்லை.

சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏர்ஸ்கின் மே மற்றும் கவுலன் ஷட்லர் போன்ற விதிகள் மற்றும் மரபுகளைக் கொண்ட புத்தகங்களைப்படிக்குமாறுபரிந்துரைக்கிறேன். வெளிநாட்டு தூதுவர்களுக்கு முன்னால் நாடாளுமன்ற நட்புறவுச்சங்க தலைமை பதவிக்கும்வாக்கெடுப்புநடத்துமாறுகோரிக்கை விடுத்தனர். இது பாராளுமன்ற சம்பிரதாயம் அல்ல. அதனால் முற்போக்காக செயற்பட வேண்டும் என்றார்.

## உலக....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரஸ்பர ஆர்வமுள்ள பல துறைகள் குறித்து ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த உள்ளார் என்றும் வெளியுறவு அமைச்சகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## அருச்சுனா....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. தயவுசெய்து அந்த சட்டத்துக்கமைய நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவை நோக்கி சபாநாயகர் குறிப்பிட்டார்

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதனையடுத்து ஜனாதிபதியின் அறிவிப்பு, குழுக்களின் அறிவிப்புக்களை சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. 2025.01.21 இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து தான் கொழும்பு நோக்கி வரும்போது அநுராதபுரம் பகுதியில் தனது வாகனத்தைப் போக்குவரத்துப் பொலிஸார் நிறுத்தியபோது ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் சிறப்புரிமைப் பிரச்சினையை முன்வைத்து அர்ச்சுனா உரையாற்றினார்.

அர்ச்சுனா தமிழில் உரையாற்றிய நிலையில் அதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் 'நீங்கள் உங்களின் சிறப்புரிமை பிரச்சினை தொடர்பான பத்திரத்தை ஆங்கிலத்தில் சமர்ப்பித்துள்ளதால் ஆங்கிலத்திலேயே உரையாற்றவேண்டும்என்றுஅறிவுறுத்தினார்.

இதன்போது 'நான் சிங்களத்தில் உரையாற்றவா?' என்று அர்ச்சுனா சபாநாயகரிடம் கேட்டார். இதற்கு பதிலளித்த சபாநாயகர் 'முடியாது. நீங்கள் ஆங்கிலத்தில் கடிதத்தை முன்வைத்துள்ளதால் அந்த மொழியிலேயே உரையாற்ற முடியும்' என்றார்.

அதனைத் தொடர்ந்து அர்ச்சுனா ஆங்கிலத்தில் உரையாற்றிய நிலையில், இடையில் குறுக்கிட்ட சபாநாயகர் 'நீங்கள் வழங்கிய கடிதத்தில் உள்ள விடயங்களை மட்டுமே குறிப்பிட முடியும்' என்று அறிவுறுத்தினார். எனினும் அர்ச்சுனா தொடர்ந்தும் வேறு விடயங்களை முன்வைத்ததுடன் சபாநாயகரை நோக்கி விரல் நீட்டி உரையாற்றினார்.

இதன்போது அர்ச்சுனாவின் உரை தொடர்பில் அறிவித்தல் விடுத்த சபாநாயகர், அர்ச்சுனாவினால் முன்வைக்கப்பட்ட சிறப்புரிமை கடிதத்தில் இல்லாத விடயங்கள் அனைத்தும்ஹன்சாட்டில்இருந்துநீக்கப்படும் என அறிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய சபாநாயகர் அர்ச்சுனாவை நோக்கி 'நீங்கள் போக்குவரத்து விதியை மீறியுள்ளமை தொடர்பிலும், உங்களுக்கு எதிராக போக்குவரத்து சட்டத்தின்படிநடவடிக்கைஎடுப்பதுதொடர்பிலும் பொலிஸாரால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்டம் அனைவருக்கும் சமமானது. பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி அமைச்சராக இருந்தாலும் சரி எவருக்கும் சட்டத்தை மீறிச் செல்ல முடியாது. இதனால் தயவுசெய்து அந்த சட்டத்துக்கமைய நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை நீங்கள் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பங்கெடுப்பதற்கான வசதிகளை வழங்குமாறும் நாங்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளோம். இதற்கு அப்பால் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்' என்றார்.

அதனைதொடர்ந்துமீண்டும்உரையாற்ற அர்ச்சுனா முயன்ற நிலையில், 'நீங்கள் சமர்ப்பித்த பத்திரத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களை முன்வைக்கின்றீர்கள்' என்று குறிப்பிட்டு, தொடர்ந்து உரையாற்றுவதற்கு அனுமதிவழங்குவதைமறுத்தார், சபாநாயகர்.

## இந்திய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்தபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

மீனவர் பிரச்சினை நீண்டக் காலமாக காணப்படும் ஒரு சிக்கலாகும். பல்வேறு ஆளும்தரப்புக்களின் கீழ் பேச்சு முன்னெடுக் கப்பட்ட ஒரு பிரச்சினையுமாகும். இலங்கை மற்றும் இந்திய அரசுகளுக்கு இடையில் அதிகளவில் பேசப்பட்ட, பேசப்படும் ஒரு பிரச்சினையாகவும் இது காணப்படுகிறது.

எமது ஆளும்தரப்பிலும் இந்தப் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. ஆளும்தரப்புஎன்றரீதியில்செயற்படுவதற்கான வரையறைகளும் உள்ளன. கடற்படை அதன் சுற்றிவளைப்புக்களை அதிகரித்திருக்கிறது. அதற்கமையவே கைதுகளும் அதிகரித்திருக் கின்றன.

அதேவேளை மறுபுறம் பேச்சு தொடர்ச்சியாகமுன்னெடுக்கப்பட்டுவருகின்றது. எவ்வாறிருப்பினும் இந்தப் பிரச்சினைக்கு ஓரிரு வாரங்களுக்குள் தீர்வினை வழங்க முடியும் என்று நாம் நம்பவில்லை.

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்ட விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை கடற்படை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறது.

எமது கடல் வளங்களை எமக்கு நன்மை கிடைக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதோடு, அவற்றை பாதுகாக்கவேண்டும் என்பதே எமது இலக்காகும்.

அதனை அடிப்படையாகக் கொண்ட பேச்சுக்களை முன்னெடுப்பதோடு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் வலுப்படுத்துவோம் என்றார்.

## நெல்லுக்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்வோம்.

நெல்லின் விலையை நிரண்யம் செய்யும்போது விவசாயிகளுக்கு ஒரு கிலோவுக்கு செலவாகும் விலை உள்ளது. விவசாயிகள் உற்பத்திச் செலவை ஈடு செய்து இலாபத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் மூன்றில் ஒரு பங்கு சேர்த்து விவசாயிகளுக்கு வழங்கப்படும். எனவே எவரினதும் அரசியல் தலையீடு மற்றும் கொள்கைகளுக்கு அகப்படவேண்டாம் என விவசாயிகளிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

தற்போது நெற்சந்தைப்படுத்தல் அதிகாரசபையில் தெளிவாக விலைக்குறிப்பிடப்பட்டுள்ளது. உங்களுடைய நெல்லை எமக்கு வழங்குங்கள். இதன் ஊடாக அவை உரிய நேரத்தில் சந்தைக்கு கொண்டு சேர்க்கப்படும். அத்துடன் இதனை நாம் சிறிய நடுத்த தர அரிசி உற்பத்தி ஆலையாளர்களுக்கும் விடுவிப்போம்.

நுகர்வோருக்கு பாதிக்காத வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு தலையீடு செய்வோம். ஆனால் கடந்த காலத்தில் நெற்சந்தைப்படுத்தல் அதிகாரசபையினால் நெல் களஞ்சிப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக அரிசியில் மாபியா தலையீடு காணப்பட்டது.ஆனால்நுகர்வோர்அதிகாரசபை அரிசி சுற்றிவளைப்புகளில் ஈடுப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் நுகர்வோர் அதிகாரசபையும் சரியாகச் செயற்படவில்லை. எனவே நாம் தற்போது இந்த விடயத்தில் தலையீடு செய்துள்ளோம்.நெல்லுக்குநிர்ணயவிலையை அறிவித்து எமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

கடந்த காலங்களில் நிர்ணய விலை தொடர்பில் விவசாய அமைப்புகள் விமர்சனங்களை முன்வைத்தன. எனினும் எவர் என்ன கூறினாலும் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பாதிக்காத வகையில் சரியான நேரத்திலேயே விலைகளை அறிவித்துள்ளோம். தற்போது அரசியல்வாதிகளுக்கும் விவசாய அமைப்புகளுக்கும் ஏற்ற வகையில் நெற்சந்தைப்படுத்தல்அதிகாரசபைவிலையை அறிவிக்கவில்லை என்றார்.

## பகிரங்க....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விச்செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம்பேசும்போ-து இதனைத்தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் உயிரியல் தரவுகளை சேகரித்தல் குறித்து எமது கேள்விகளுக்கு ஆளும்தரப்பு பதிலளிக்க வேண்டும். நாட்டை டிஜிட்டல் மயமாக்கும்போதும் டிஜிட்டல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்தும் போதும் உயிரியல் தரவுகளின் அவசியம் எதற்கு? டிஜிட்டல் மயமாக்கல் என்பது வேறு.உயிரியல்தரவுகள் என்பது வேறாகும்.

இரண்டையும் குழப்பிக்கொள்ள வேண்டாம். உதாரணமாக இத்தாலியில் டிஜிட்டல் அடையாள அட்டை பாவனை உள்ளது. ஆனால் அந்த ஆளும்தரப்பு மக்களின்உயிரியல்தரவுகளைகோரவில்லை. அவ்வாறாயின் ஆளும்தரப்பு எவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்தத் தரவுகளைப் பயன்படுத்தும் என்பதைக்கூற வேண்டும்?

குறிப்பாக நவீன தொழில்நுட்பத்தின் முதல்நிலையில் இருப்பவர்கள் எனக்கூறிக் கொள்ளும் அமெரிக்கா தென்கொரியாவிலும் எமக்குத் தற்போது டிஜிட்டல் மயமாக்கலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக்கூறும் இந்தியாவிலும் கடந்தகாலங்களில் தரவுக்கட்டமைப்புக்கள் திருடப்பட்டுள்ளன.

எமது நாட்டிலும் அண்மையில் அரச அச்சகத்திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையப்பக்கங்கள் ஊடுருவப்பட்டன. எனவே இந்தத் தரவுகள் எதிர்காலத்தில் திருடப்படாது என்பதற்கு ஆளும்தரப்பு வழங்கும் உத்தரவாதம் என்ன?

அத்துடன் இந்தத்திட்டத்தை எந்த இந்திய நிறுவனம் மேற்கொள்ள இருக்கிறது? அந்த நிறுவனம் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டது? அந்த நிறுவனத்தைப் பற்றிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுஅறிக்கைசமர்ப்பிக்கப்பட்டதா? குறித்த இந்திய நிறுவனத்தின் தலையீடு எந்த மட்டத்தில் இருக்கும்? இந்த தரவுத்தள கட்டமைக்குள்மாற்றுமுறையைபயன்படுத்தி குறித்தநிறுலனம்ஊடுருவதைதடுப்பதற்கான மாற்றுவழி உள்ளதா? அவ்வாறாயின் அதனைதடுக்கவழிஎன்ன? இந்தத்திட்டத்தில் இலங்கையில்எந்தநிறுவனம்ஈடுபட்டுள்ளது? அந்த நிறுவனம் எந்த முறையில் தெரிவு செய்யப்பட்டது? இடைப்பட்ட காலப்பகுதியில் தொழில்நுட்ப சிக்கல்கள் ஏற்பட்டால் இந்திய நிறுவனம் மீண்டும் அழைக்கப்படுமா? அந்த சந்தர்ப்பத்தில் தரவுகள் திருடப்படமாட்டது என்பதற்கு உத்தரவாதம்என்ன? இதுபோன்ற பல பிரச்ச்சினைகளுக்கு ஆளும்தரப்பு பதில் வழங்க வேண்டும்.

இது குறித்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மற்றும் பிரதி அமைச்சருக்கும் எமது கேள்விகளுக்கு பதில் அளிக்குமாறு சவால் விடுக்கிறோம்.

இருவரில் ஒருவர் எமது கேள்விகளுக்கு பதில் வழங்க முடியும். இது பற்றி பேசும் அமைச்சர்களை அழைத்து வரலாம். விசேட நிபுணர்கள் எனக் கூறிக்கொள்ளும் தரப்பினரையும் அழைக்கலாம். நாங்கள் தயார். எனவே இந்த விடயத்தில் ஆளும்தரப்புபின்வாங்கக்கூடாது.மக்களுக்கு உண்மைகளை கூற வேண்டும்.

இதுபோன்ற விடயங்களை திருட்டுத்தனமாகவும் மறைத்தும் செய்வதற்கு எம்மால் அனுமதிக்க முடியாது. எமது அழைப்பை புறக்கணித்து உண்மைகளை மறைக்க ஆளும்தரப்பு முயற்சித்தால் மக்கள் உயிரியல் தரவுகளை வழங்கமாட்டார்கள் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# ஒன்றுபட்ட தேசத்தினை கட்டியெழுப்ப ஒற்றுமையுடன்கூடிப் பயணிப்போம்

(றிபாஸ்)

இலங்கையின் சுதந்திரத்தினத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்ட தேசத்தினை கட்டியெழுப்ப ஒற்றுமையுடன் பயணிப்பது காலத்தின் தேவையாகும் என தெரித்தார் அமேசன் கல்லூரி மற்றும் அமேசன் கெம்பஸ் நிறுவகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார்.

புரிந்துணர்வுடனும், தியாகங்களுடனும் எமது நாட்டினை கட்டியெழுப்புவோம் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையின் 77 வது சுதந்திரத்தினத்தினை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கைஅடக்குமுறையாளர்களிடம்இருந்துமீட்டெடுக்கப்பட்டு இன்றுடன் 77 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், இன்னும் எமது நாடு பொருளாதார , கலாசார மற்றும் இதர துறைகளிலும் பின்தங்கிய நிலையினையே கண்டுள்ளது. இதற்கு காரணம் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற சிந்தணையின் வீரியம் குறைந்துள்ளதையே எடுத்துக்காட்டுகின்றது.

குறிப்பாக பல்லின அழகான சமூக கட்டமைப்பினை கொண்ட எமது தாய் நாட்டின் பெருமையினை உலகறியச் செய்வது எமது கடமையாகும்.

எமது தேசத்தின் அடையாளமே எமது வேற்கை என்பதை புரிந்து எம்மில் காணப்படும் மாற்று சிந்தனைகளை புறந்தள்ளி இலங்கையின் பிரகாசத்திற்கும், புரிந்துணர்வு, அன்பு பறிமாற்றம், பரஸ்பரம் என்பனவற்றினை சிரம் கொண்டு பயணிக்கும் நாளாக இன்றைய சுதந்திர தினம் அமைய வேண்டும் என்று வேண்டுவதாக இல்ஹாம் மரைக்கார் மேலும் தமது சுதந்திர தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# அர்ச்சுனா எம்.பிக்கு சகாதேவன் பாராட்டு



(சுபேசன்)

தனியாருக்கு வழங்கப்பட்டிருக்கும் திக்கம் வடிசாலையை மீளப் பெறும் முயற்சிக்கு ஆதரவளித்துவரும் அர்ச்சுனா எம்.பியின் செயற்பாட்டிற்கு பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; -

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பல்வேறு விடயங்கள் தொடர்பில் என்னோடு முரண்பட்டிருந்தார்.

அந்தவகையில் கடந்த 31-01 அன்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் முரண்பாடுகள் ஏற்படும் எனப் பலரும் எதிர்பார்த்திருந்தனர்.ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா திக்கம் வடிசாலை தொடர்பாக பெரிதாக அறிந்திருக்காவிட்டாலும் தான் அறிந்த விடயங்களை வைத்து எமது பனை அபிவிருத்திச் சபைக்கு சார்பாக கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஒத்துழைப்பு வழங்குவதன் ஊடாக ஒடுக்கப்பட்ட சமூகங்களுடைய உரிமைகளை மீட்டெடுக்க முடியும்.

அதேநேரம் 04-02 செவ்வாய்க் கிழமை அன்று தொலைபேசி வாயிலாக என்னை தொடர்புகொண்ட நாடாளு மன்ற உறுப்பினர் அர்ச்சுனா திக்கம் வடிசாலை தொடர்பாக சில ஆவணங்களை என்னிடம் கோரியிருந்தார். நிறுவனத் தலைவர் என்ற அடிப்படையில் அவர் கோரிய ஆவணங்களை அனுப்பி வைப்பேன்.

அத்தோடு பாரிய பின்னடைவைச்சந்தித்திருக்கும்பனை அபிவிருத்திச் சபையை மீட்க எனக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் பெருந்தோட்ட பிரதி அமைச்சர் சு.பிரதீப் ஆகியோருக்கும் நன்றிகள் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# புத்தளம் இந்துக் கல்லூரியில் நடந்த இலவச கணிதப் பாடக் கருத்தரங்கு

(சியாஜ்)

புத்தளம் இந்து மத்திய (தேசிய பாடசாலை) கல்லூரியில் இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுத உள்ள மாணவர்களுக்கான இலவச கணிதப் பாட கருத்தரங்கு தேசத்தின் குரல் அமைப்பின் அனுசரணையில் பாடசாலையின் அதிபர் பீ.ஆர். தம்பிதுறை தலைமையில் நடைபெற்றது .

ஆயிரம் மாணவர்களுக்கு இலவசகணிதக் கருத்தரங்கு என்னும் வேலைத்திட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் ஊடாக இடம்பெற்ற மூன்றாவது கருத்தரங்கின் விரிவுரையை பாடசாலையின் கணித பாட ஆசிரியர் எம் டீ. எம் இம்ரான் ஹூசைன் மேற்கொண்டார்

இதில் தேசத்தின் குரல் அமைப்பின் தலைவர் எப்.எம் பாசீல் (பொறியியலாளர்) பிரதித் தலைவர் ஹிஜாஸ் மரைக்கார், உயர்பீட உறுப்பினர்களும், ஆலோசகர்களுமான ஏ.ஏ தாரிக், ஏ.எம் அனீஸ் மற்றும் ஒபேட் அமைப்பின் தலைவர் எம் டி.எம் நபீல் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# 44 வயதுடைய சந்தேகநபர் போதைபொருளுடன் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய சந்தேக நபரை திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திருக்கோவில் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கை மற்றும் வீதி ரோந்து நடவடிக்கையின் போது கல்முனைக்குடி 10 பகுதியை சேர்ந்த 44 வயது சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கைதானார்.



இவ்வாறு கைதான சந்தேக நபர் வசம் இருந்து ஒரு கிராம் 280 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் மற்றும் சான்றுப் பொருள்கள் யாவும் சட்ட நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் திருக்கோவில் விசேட அதிரடிப் படையினினால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# கேரளா கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த 2 பிரபல வியாபாரிகள் அதிரடிப் படையால் கைது

(பாறுக் ஷிஹான்)

பெருந்தொகையான கேரளக் கஞ்சாவுடன் 2 பிரபல வியாபாரிகள் கல்முனை விசேட அதிரடிப் படையினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் மறைந்திருந்த ஒரு சந்தேக நபரும் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்பர் கிராம சனசமூக வீதி முன்பாக உள்ள பகுதியில் மறைந்திருந்த மற்றுமொரு சந்தேக நபரும் கைதாகினர்.

கல்முனை விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றிற்கமைய தேடுதல் மேற்கொண்ட போது இவ்விரு சந்தேக நபர்களும் பெருந்தொகையான கேரளா கஞ்சா மற்றும் ஒரு தொகை பணத்துடன் கல்முனை விசேட அதிரடிப்படையினர் இரு வேறு சந்தர்ப்பங்களில் புதன்கிழமை அதிகாலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 54 வயது 62 வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன் நீண்ட காலமாக இச்சந்தேக நபர்கள் கல்முனை சாய்ந்தமருது மருதமுனை நற்பிட்டிமுனை உள்ளிட்ட பகுதிகளில் கேரளா கஞ்சாவை விற்பனை செய்தும் விநியோகித்தும் வந்துள்ளதாக எமது செய்தியாளர் பாறுக் ஷிஹானிடம் கல்முனை விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதான இருவரில் 7 கிலோ கேரளா கஞ்சாவை வைத்திருந்தவர் பெரிய நீலாவணை அக்பர் வீதியை சேர்ந்த பிரபல கைக்கடிகாரம் திருத்தும் நபர் என்பதுடன் 4 கிலோ கேரளா கஞ்சாவினை வைத்திருந்த மற்றைய சந்தேக நபர் கல்முனை நகரில் அமைந்துள்ள பிரபல ஆடையகத்தை நடாத்தி வந்தவர் என்பதும் மேலதிக விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

மேலும் சந்தேக நபர்கள் வசம் இருந்து பெருமளவான கேரள கஞ்சா பொதிகள் ஒரு மோட்டார் சைக்கிள், 5 லட்சம் 90 ஆயிரம் ரூபா பண நோட்டுக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன்



கல்முனை விசேட அதிரடிப்படையினர் சட்ட நடவடிக்கைகாக பொலிஸாரிடம் ஒப்படைக்க தயாராகி வருகின்றனர்.

இந்நடவடிக்கையானதுவிசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறைவலயக்கட்டளைபதில் அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய அம்பாறை மாவட்ட பதில் கட்டளை அதிகாரியும் மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகருமான சம்பத் ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க மேற்பார்வையில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பி.இஹலகே தலைமையிலான விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவினர் இணைந்தே இந்நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தாய்நாட்டை நேசிப்பதும் அதன்மீது பற்று வைப்பதும் ஒவ்வொரு தனி மனிதனதும் தார்மிகக் கடமையாகும்

## கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகத் தலைவர் தெரிவிப்பு

(அஷ்ரப்கான்)

தாய்நாட்டை நேசிப்பதும் அதன்மீது பற்று வைப்பதும் ஒவ்வொரு தனி மனிதனதும் தார்மீகக் கடமையாகும் என்று ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகத் தலைவர் ரஹ்மத் மன்சூர் தனது சுதந்திர தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடும்போது -

எமது தாயகத்தின் 77 ஆவது சுதந்திர தினத்தை நாம் நினைவு கூர்ந்து கொண்டிருக்கின்றோம்.

இன, மத, குல, சாதி, வர்க்க பேதங்களின்றி எமது தாயக பூமியான இலங்கைத் திருநாட்டின் சுதந்திரத்திற்காக உழைத்த, அர்ப்பணித்த அத்தனை தலைவர்களையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

தாய்நாட்டை நேசிப்பதும் அதன்மீது பற்று வைப்பதும் ஒவ்வொரு தனி மனிதனதும் தார்மிகக் கடமையாகும். மேலும் அதன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்வதும் அதன் பாதுகாப்பை உறுதி செய்வதும் தேசத்தின் ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாகும்.

கடந்த நூற்றாண்டில் நாம் இழந்த மற்றும் தவறவிட்ட வளமான நாட்டையும் - ஓர் அழகான வாழ்க்கையையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சவாலுடன் நாம் அனைவரும் இப்போது ஒன்றாக போராடுகிறோம்.

நமது எதிர்கால சந்ததியினருக்காக நாட்டை புதிய நிலைக்கு உயர்த்த வேண்டும். இரத்தம், கண்ணீரால் போராடிய வரலாற்றின் அனைத்து தலைவர்களினதும் தியாகத்தின் எதிர்பார்ப்பு அதுவேயாகும். அதற்கிணங்க, நாம் தனித்தனியாகவும், கூட்டாகவும், ஒருங்கிணைந்த சமூகக் கட்டமைப்பாக, சுற்றாடல் மற்றும் ஒழுக்கநெறியூடாக அபிவிருத்தியடைந்த நவீன இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.



எமது நாட்டின் அண்மைக்கால அரசியல், பொருளாதார நெருக்கடிகள் எம்மனைவரது வாழ்வியலையும் வெகுவாகப் பாதித்துள்ள இக்கட்டான இந்நிலையில் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் வெகு சீக்கிரம் சீராக வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும்அமைதியும்சமாதானமும்கோலோச்சுகின்ற முன்மாதிரிமிக்க சுத்தமான இலங்கை நாடொன்றை நாம் கட்டியேழுப்புவதுடன்

நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் அவரவர் உரிமைகளைப் பெற்று, சமாதானத்துடனும் சுபிட்சத்துடனும் வாழ வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2025இல் வெளியிடப்பெற்றது